**01.06.2022 ஆம் தேதிய அவசரக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்**

## பொருள் எண்.1

இந்நகராட்சியில், உள்ளாட்சி தேர்தல் 2022 அவசரப் பணியின் காரணமாக அலுவலக வளாக கட்டிடங்களில் ஒரு பகுதிக்கு (நகர்மன்றக் கூடம், நகர்மன்றத் தலைவர் அறை மற்றும் அதனோடு சேர்ந்த பொறியியல் பிரிவு, கணணி அறை) வர்ணம் பூசப்பட்டது. ஏனைய பொதுப்பிரிவு, சுகாதாரப்பிரிவு, நகரமைப்பு பிரிவு கட்டிடங்கள் வர்ணம் பூசப்படாமல் உள்ளது. எனவே மேற்காணும் பிரிவு கட்டிடங்களில் வர்ணம் பூசும் பணியினை ரூ.2,30,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.548/2022/இ1

**தீர்மானம் எண். 352 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**30.12.2022 ஆம் தேதிய சாதாரணக் கூட்டப் பொருட்கள்**

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 துறைமுகத்தெருவின் C மண்டலத்தில், வரிவிதிப்பு எண்.148/022/900370 என்ற கட்டிடம் திரு.சகாய பிராங்கிளின் என்பவர் பெயரில் சொத்துவரி வணிக பயன்பாடு என பதிவேட்டில் உள்ளது. மேற்படி கட்டிடமானது 2017-2018 முதலாம் அரையாண்டில் முதல் வணிக பயன்பாடு என வரிவிதிப்பு செய்யப்பட்டு சொத்துவரி 2022-2023 இரண்டாவது அரையாண்டு வரை சொத்துவரி வசூல் செய்யப்பட்டு உள்ளது. தற்பொழுது கட்டிடமானது குடியிருப்பு பயன்பாடாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் மேற்படி நபர் (சகாய பிராங்கிளின்) மனுவில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் நகரமைப்பு ஆய்வாளர் முன்னிலையில் இடம் சென்று பார்வையிடப்பட்டு அறிக்கை வழங்கியதன் படி, கதவு எண்.9-154/1 வரிவிதிப்பு எண்.148/022/900370 என்ற கட்டிடத்தை வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றம் செய்யப்பட்டு உள்ளதாக அறிக்கை அளித்து உள்ளார். எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20364/2009/ஆர்1 நாள் 26.06.2009 படி மேற்படி கட்டிடத்தை வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றம் செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1137/2022/அ1

**தீர்மானம் எண். 353 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு தேவையான Compatible Toner வாங்க உத்தேச செலவு தொகை ரூ.25000/- மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேலும் அவசர அவசியம்

கருதி உள்ளூர் கடைகள் மூலம் வாங்கவும் அத்தியாவசியமாக தேவை உள்ளதால் விலைப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வழங்கலாம்.

**அ.கு.**மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1347/2015/சி1

**தீர்மானம் எண். 354 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.3

இந்நகராட்சி பகுதியில் நகர புல எண்.L1.12 மற்றும் L1 11/1A4 இல் உள்ள கட்டிடம் திப்புர்சியாஸ் என்பவருக்கு சொந்தமானதாகும். இதில் S.Sam Gladson என்பவர் திப்புர்சியஸ்க்கு சொந்தமான சுவரை பொது சுவராக பயன்படுத்துவதாக W.P(MD)No.18160-2014 இல் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்நகராட்சி சார்பாக ஆஜராகும் அரசு வழக்கறிஞர் (Govt.Pleader) பாஸ்கரன் அவர்கள் ஆஜரான கட்டணம் ரூ.9,500/-ஐ வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வழக்கறிஞருக்கான தொகைக்கு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டது. எனவே மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1375/2015/TPI

**தீர்மானம் எண். 355 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.4

இந்நகராட்சி பகுதி மரமடி குருசடி முன் பகுதி விரிவாக்கம் செய்யும் போது பீட்டர் என்பவர் W.P(MD)No.23539/2015-ல் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு முடிவடைந்த பட்சத்தில் அவமதிப்பு வழக்கு Cont.P(M.D)No.552/2018 தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகும் அரசு வழக்கறிஞர் (Govt.Pleader) திரு.கிருஷ்ணதாஸ் அவர்கள் ஆஜரான கட்டணமாக ரூ.9500/-ஐ வழங்கவும், மேற்படி செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வழக்கறிஞருக்கான தொகைக்கு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டது. எனவே மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.107/2015/TPI

**தீர்மானம் எண். 356 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.5

இந்நகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்ற மற்றும் சுயவிருப்ப ஓய்வில் சென்ற கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதித் தொகைக்கான நிர்வாக பங்கு தொகை வழங்குவதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர் திரு / திருமதி. | பணி ஓய்வு பெற்ற நாள் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | பி.நசீமா, தூய்மை பணியாளர் (ஓய்வு) | 30.04.2022 | 10,000/- |
| 2 | ஆர்.ஐரின், துப்புரவு பணி மேற்பார்வையாளர்(ஓய்வு) | 30.04.2022 | 10,000/- |
| 3 | எல்.பிரபாகரன், மின்கம்பியாளர் (ஓய்வு) | 31.10.2022 | 10,000/- |
| 4 | பா.மணி, துப்புரவு பணி மேற்பார்வையாளர் (சுய விருப்ப ஓய்வு) | 31.10.2022 | 10,000/- |
| 5 | பி.நடராஜன், தூய்மை பணியாளர் (ஓய்வு) | 30.06.2022 | 10,000/- |

**அ.கு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேலும் வரிசை எண்.1 மற்றும் 2-ல் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1396/2022/B1

**தீர்மானம் எண். 357, ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண்.1 மற்றும் 2-ல் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் 1990 ஆம் ஆண்டு கட்டப்பட்டு 32 வருடங்கள் ஆகின்றது. மேற்படி பேருந்து நிலையத்தில் இருந்து தினசரி 103 எண்ணம் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் 39 எண்ணம் கடைகளும் கட்டப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பேருந்து நிலையம் மிக மோசமாக பழுதடைந்துள்ளதால் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை அரசாணை எண்.173 நாள் 08.12.2022-ன் படி ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு (Infrastructure and Amenities Fund 2.50 + SBM 2.0 - 0.37 + pro auction of shops - 0.63 + Capital Grant Fund - 1.50 ) செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை செயல்முறை ந.க.எண்.11112/2022/TP2 நாள் 14.12.2022-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பெற்றுள்ளது.

எனவே புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு பழுதடைந்த நிலையில் உள்ள பழைய பேருந்து நிலையத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்லாம்.

ந.க.எண்.498/2022/இ1

**தீர்மானம் எண். 358 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.7

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் (ஈப்பு) எண்.TN 74 V 3530 -க்கான வாகன காப்பீடு 05.12.2022 -ல் முடிவடைவதால் அடுத்து வரும் ஓராண்டிற்கு காப்பீட்டை புதுப்பிப்பதற்காக 'The New India Assurance Co Ltd'., Karungal நிறுவனத்திடமிருந்து ரூ.10,140/- க்கான கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து 'The New India Assurance Co Ltd., Karungal நிறுவனத்திற்கு செலுத்தி காப்பீடை புதுப்பித்து கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண். 359 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிகவளாகம் கடை எண்கள்.29,30 ஆகிய இரண்டு கடைகள் 30.06.2022 உடன் 9 ஆண்டுகளும், 26,31 ஆகிய இரண்டு கடைகள் 30.11.2022 உடன் 6 ஆண்டுகளும் முடிவடைந்து விட்டது. மேற்காணும் கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் புதுப்பித்தல் கோரி மனு செய்துள்ளார்கள். குத்தகை காலம் உரிமம் நீட்டிப்பு செய்வதற்கு ரூ.1000/- வீதம் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தவும், கடை எண்கள்.29,30 ஆகிய கடைகளை 01.07.2022 முதல் 30.06.2025 வரைக்கும், கடை எண்கள்.26,31 ஆகிய கடைகளை 01.12.2022 முதல் 30.11.2025 வரைக்கும் மாத வாடகையில் 15% உயர்வு செய்து கீழ்காணும் விபரப்படி மாதவாடகை உயர்வு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்**</u>

| வ.எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் | தற்போதைய மாத வாடகை (GST தவிர) | 15% உயர்வு செய்ய வேண்டிய வரி | வரி உயர்வு செய்யப்பட்ட பின்னர் மாத வாடகை (GST தவிர) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 26 | 148/2016001 | கிங்ஸ்லி மில்ட்டன்ராஜ் | 1150 | 173 | 1323 |
| 2 | 29 | 148/2013002 | LIC மினி | 1323 | 198 | 1521 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அலுவலகம் | | | |
| 3 | 30 | 148/2013003 | LIC மினி அலுவலகம் | 1323 | 198 | 1521 |
| 4 | 31 | 148/2016002 | ஷீபா | 1150 | 173 | 1323 |

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**.01/2020/**அ**3

**தீர்மானம் எண். 360 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.26-ஐ திருமதி.விஜயலெட்சுமி என்பவர் 01.09.2020 முதல் நடத்தி வந்தார். கடையின் வரிவிதிப்பு எண்.148/SC03/00012 ஆகும். கடையினை தன்னால் நடத்த இயலாத காரணத்தினால் இந்நகராட்சியில் 18.11.2022 ஆம் தேதி ஒப்படைத்துள்ளார். கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.50,000/- மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகை ரூ.26400/- (2200 X 12) மொத்தம் சேர்த்து ரூ.76400/- செலுத்தியுள்ளார். கடைக்கு மாத வாடகை மே 2021 முதல் டிசம்பர் 2022 முடிய உள்ள மாத வாடகையை ஈடு செய்து மீதமுள்ள தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**.01/2020/**அ**3

**தீர்மானம் எண். 361 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு கண்காணிப்பு வாகனம் TN 75 K 6526-**க்கு** Clutch mass clinder, Break Oil, Coter pin, Dynamo over oiling press holder change, Full wiring check up and Mass cylinder கழற்றி சாப்ட் வெல்டிங் சரி செய்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.4490/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட ஓட்டுநருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7057-1/2011/இ1

**தீர்மானம் எண். 362 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் வெள்ளியாகுளம் முருகன் கோவிலில் இருந்து நரிக்கல் செல்லும் சாலை மண் சாலை ஆகும். மண் சாலையில் வசிக்கும் பொது மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கேட்டுள்ளதன்படி, நரிக்கல் சாலையில் இருந்து வெள்ளியாகுளம் சாலைக்கும் ஏறும் சாய்வு தளத்தில் காங்கிரீட் அமைப்பதற்கு மதிப்பீடு

ரூ.1,50,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1410/2022/இ1

**தீர்மானம் எண். 363 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்கு சொந்தமன அம்மா உணவகத்தில் இருக்கும் பாயிலர் ஸ்டவ் வைக்கும் ஸ்டாண்ட் மற்றும் கேஸ் சிலிண்டரில் இருக்கும் ரெகுலேட்டர் பழுதடைந்து விட்டதல், புதிதாக பாயிலர் ஸ்டவ் ஸ்டேண்ட் மற்றும் ரெகுலேட்டர் வாங்குவதற்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | Sri Jothi Modern Kitchen equipments, Edalakudy | 9,440/- |
| 2. | Sivaji Industries, Nagercoil | 10,266 |
| 3. | S.M.Enterprises, Nagercoil | 11,446 |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் Sri Jothi Modern Kitchen equipments, Edalakudy அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1406/2022/அ1

**தீர்மானம் எண். 364 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.13

இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண்.TN 74 T 5508 -க்கு மராமத்து பணிகள் (FC Work) மேற்கொள்ள மதிப்பீடு ரூ.88,000/- தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Ganesh Motor Works, Vadasery | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | M/s.Mathava Motor Works Nagercoil | மதிப்பீட்டை விட 17.81% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் நிறுவனம் M/s.Ganesh Motor Works,Vadasery அளித்துள்ள மதிப்பீட்டு விகிதம் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி 10.12.2022 அன்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்

அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டது என்பதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.கு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கு.

ந.க.எண்.2913/2009/எச்1

**தீர்மானம் எண். 365 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.14

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில், இந்நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளில் சுற்றுச்சூழல் 2023 நடைபெற உள்ளதால், மேற்படி கழிப்பறைகளில் பொது மக்கள் குறைகளை பதிவிடுவதற்கு ஏதுவாக QR Code (விரைவான பதில் குறியீடு) நிரந்தர அட்டை பொருத்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நகரில் உள்ள 5 கழிப்பிடங்களுக்கும் அளவுகள் 20 செ.மீ அகலம் X 30 செ.மீ நீளம் அளவில் (A4) 150 GSM-ல் ஊதா நிறத்தில் QR Code மற்றும் 5 மி.மீ தடிமனில் 26 செ.மீ 42 செ.மீ அளவில் பைபர் ஷீட்டில் QR Code பொருத்துவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.5,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1421/2022/எச்1

**தீர்மானம் எண். 662 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.15

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் Battery Operated Vehicle வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3,50,000/- க்கு தயார் செய்யப்பட்டு, 07.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் இரண்டு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றத. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.ONYX Green Tech<br>Mulagumoodu Post, K.K.Dist | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | M/s.Galaxy Systems | மதிப்பீட்டை விட 4.09% அதிகம் |

| | | |
|---|---|---|
| | Madurai | |

மேற்படி இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் நிறுவனம் M/s.ONYX Green Tech, Mulagumoodu அளித்துள்ள மதிப்பீட்டு விகிதம் ஒப்பந்தப் புள்ளி யை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி 07.10.2022 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டது என்பதை மன்ற பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு : மேற்படி முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்..

ந.க.எண்.1066/2022/எச்1

**தீர்மானம் எண். 367 ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி